# ஹஸ்ரத் உம்மே ஹானீ

(ரலியல்லாஹு அன்ஹா)



நஸீரா ஸைய்யால்

# ஹஸ்ரத்
# உம்மே ஹானீ

ரலியல்லாஹு அன்ஹா

நஸீரா ஸைய்யால்

**வெளியிடுவோர்**
லஜ்னா இமாயில்லாஹ்
தூத்துக்குடி

**Tamil Translation of the Book**

**Hazrat Umme Haani[ra]**

ஹஸ்ரத் உம்மே ஹானீ[ரலி]

Author : Naseera Sayyal
Translator : R. Amathul Qadheer

First Edition : 2021
Copies : 1000

Publisher : Lajna Imaillah
Tuticorin-Tamil Nadu

Printed at : Shanthi Screens
Tirunelveli-627001
Tamil Nadu

National Toll free No: 1800-103-2131
Tamil Toll free No: 1800-425-40000

# முன்னுரை

இந்நூல் நம் அன்பிற்குரிய தூய எஜமானர் ஹஸ்ரத் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்களின் பெரிய தந்தையின் புதல்வியான ஹஸ்ரத் உம்மே ஹானீ (ரலி) அவர்களைப்பற்றிய சுருக்கமான வாழ்க்கை குறிப்பாகும். ஹஸ்ரத் உம்மே ஹானீ (ரலி) அவர்கள் ஹஸ்ரத் அபூதாலிப் அவர்களின் அன்பு மகளும், ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களின் சகோதரியுமாவார்கள். ஹஸ்ரத் தூய நபி (ஸல்) அவர்களைப்போல் இவர்களும் அதே குடும்பத்தினரால் வளர்க்கப்பட்டார்கள் என்ற கௌரவம் இவர்களுக்கு உண்டு. இதன் காரணமாக இஸ்லாமிய வரலாற்றில் அன்னார் சிறப்பான அந்தஸ்தைப் பெற்றுள்ளார்கள். மிக எளிமையான, இறையச்சமுள்ள, அதிக அறிவாற்றல் கொண்ட பெண்மணியாக ஹஸ்ரத் உம்மே ஹானீ (ரலி) அவர்கள் திகழ்ந்தார்கள்.

இந்நூலை எல்லா வகையிலும் அருளுக்குரியதாகவும், பயனளிக்கக்கூடியதாகவும் ஆக்குமாறு அல்லாஹ்விடம் பிரார்த்தனை செய்கிறோம்.

வெளியீட்டாளர்

# பொருளடக்கம்


1. குடும்பப் பாரம்பரியம்........................................ 1
2. ஹஸ்ரத் உம்மே ஹானீ (ரலி) அவர்களின் தாயாரது சிறப்பான அந்தஸ்து........................................ 2
3. திருமணமும் குழந்தைகளும்........................................ 4
4. திருக்குர்ஆன் மீது அன்பு........................................ 5
5. உறுதியுடன் நிலைநிற்றல்........................................ 6
6. சிறப்பு அந்தஸ்து........................................ 7
7. ஹஸ்ரத் தூய நபி (ஸல்) அவர்கள் கொண்டிருந்த கண்ணியமும், மரியாதையும்........................................ 10
8. நல்லொழுக்கங்கள்........................................ 12
9. ஞானமும் அறிவும்........................................ 13
10. ஹஸ்ரத் உம்மே ஹானீ (ரலி) அவர்களது மரணம்.................. 15

بسم الله الرّحمٰن الرّحيم

# ஹஸ்ரத் உம்மே ஹானீ[ரலி] அவர்களின் குடும்பப் பாரம்பரியம்

நம் அன்பிற்குரிய எஜமானர் ஹஸ்ரத் முஹம்மத் முஸ்தஃபா (ஸல்) அவர்களின் பரிசுத்தமான, புனித நல்லியல்புகளால் கவர்ந்து ஈர்க்கப்பட்ட எண்ணிலடங்காத அரேபியர்கள், அன்னாரின் கரங்களால் ஆன்மீகத்தில் மறுபிறப்பினைப் பெற்றார்கள். அவ்வாறு வரலாற்றில் புனிதமாகப் பேசப்படுபவர்களின் வரிசையில் ஹஸ்ரத் உம்மே ஹானீ (ரலி) அவர்கள் மிகவும் முக்கிய இடத்தை வகிக்கிறார்கள். அன்னாரின் இயற்பெயர் 'ஃபாக்தாஹ்' என்றும் சில குறிப்புகளில் 'ஹின்த்' என்றும் கூறப்பட்டுள்ளது.

ஹஸ்ரத் உம்மே ஹானீ (ரலி) அவர்கள் ஹஸ்ரத் அப்துல் முத்தலிப் அவர்களின் புதல்வரான ஹஸ்ரத் அபூதாலிப் அவர்களுக்கும் அஸத் பின் ஹாஸிம் அவர்களின் மகளான ஹஸ்ரத் ஃபாத்திமா (ரலி) அவர்களுக்கும் மகளாகப் பிறந்தார்கள். ஹஸ்ரத் தூய நபி (ஸல்) அவர்களின் முதல் உடன் பிறவா சகோதரி என்ற அந்தஸ்தைப்பெற்றவர்கள் ஆவார்கள். அன்னாரின் தகப்பனார் அபூதாலிப் அவர்கள் ஹஸ்ரத் தூய நபி (ஸல்) அவர்களுக்கு பெரிய தந்தை ஆவார்கள். மேலும் அன்னாரை எட்டு வயது முதல் போஷித்து வளர்த்து வந்தார்கள். அளப்பரிய கருணையுடனும், பாசத்துடனும், தமது சகோதரரின் மகன் ஹஸ்ரத் தூய நபி (ஸல்) அவர்களை வாஞ்சையுடன் தமது நெருக்கத்தில்

வைத்திருந்தார்கள். ஹஸ்ரத் அபூதாலிப் அவர்கள் எல்லா சூழ்நிலைகளிலும், ஹஸ்ரத் தூய நபி (ஸல்) அவர்களுடனே இருந்தார்கள். அன்னார் நபித்துவ வாதத்தை பிரகடனம் செய்த போது நேர்மையாளர்கள் முழுமனதுடன் அதனை ஏற்றுக்கொண்டனர். அதே வேளையில் அதிகமான மக்கத்துவாசிகளும் வலுக்கட்டாயமாக எதிர்த்தனர். இத்தகைய கடின சூழ்நிலையில் ஹஸ்ரத் அபூதாலிப் அவர்கள் விரோதிகளுக்கு எதிரில் ஹஸ்ரத் தூய நபி (ஸல்) அவர்களுக்கு பாதுகாப்பாளராக உறுதியாக துணை நின்றார்கள். வெளிப்படையாக ஹஸ்ரத் அபூதாலிப் அவர்கள் இஸ்லாத்தை ஏற்றுக் கொள்ளாமல் இருந்த போதிலும் அன்னாரது செயல்பாடுகள் இஸ்லாத்தின் நல்லுபதேசங்களின் மீது அவர்கள் கொண்ட நம்பிக்கையை எடுத்துக்காட்டின. அன்னாரின் மனைவி ஹஸ்ரத் ஃபாத்திமா (ரலி) அவர்களும், அவர்களின் குழந்தைகளும் இஸ்லாத்தின் மூலம் ஆன்மீக முன்னேற்றம் அடைந்தனர். உண்மையில், அன்னாரின் மகன் ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் பிற்காலத்தில் இஸ்லாத்தின் நான்காவது கலீஃபாவாக ஆனார்கள்.

## ஹஸ்ரத் உம்மே ஹானீ^ரலி^ அவர்களின் தாயாரது சிறப்பான அந்தஸ்து

ஹஸ்ரத் உம்மே ஹானீ (ரலி) அவர்களின் தாயார் ஹஸ்ரத் ஃபாத்திமா (ரலி) அவர்கள் அதிக நல்லியல்பு கொண்ட பெண்மணியாவார்கள், ஹஸ்ரத் தூய நபி (ஸல்) அவர்களின் பெரியம்மா ஆவார்கள். எனவே சிறு பிராயத்திலேயே ஹஸ்ரத் தூய நபி (ஸல்) அவர்களை வளர்க்கின்ற நற்பேற்றைப் பெற்றார்கள், ஹஸ்ரத் தூய

நபி (ஸல்) அவர்களும் ஹஸ்ரத் ஃபாத்திமா (ரலி) அவர்களிடம் அன்புடனும் மரியாதையுடனும் நல்லுறவை கடைபிடித்தார்கள். அல்லாஹ் அவர்களுக்கு எத்தகைய ஞானத்தையும், கூர்மையான அறிவையும் வழங்கி இருந்தான் என்றால் அதன் காரணமாக ஹஸ்ரத் தூய நபி (ஸல்) அவர்கள் நபித்துவத்திற்கான வாதத்தை முன்வைத்த போது அன்னார் உடனே இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டார்கள். ஹஸ்ரத் ஃபாத்திமா (ரலி) அவர்களின் உள்ளம் முழுவதுமாக வல்லமை மிக்க இறைவனின் பேரன்பில் திளைத்திருந்தது. அன்னார் மரணமுற்ற வேளையில், அவர்களின் புனித உடலின் அருகில் ஹஸ்ரத் தூய நபி (ஸல்) அவர்கள் அமர்ந்து துக்கம் தாளாமல் இவ்வாறு கூறினார்கள்.

“எனதருமை அன்னையே! இறைவன் தங்கள் மீது தனது கருணையினைப் பொழிவானாக! என் தாயாருடைய மரணத்திற்குப்பின் தாங்களே எனக்குத் அன்னையாகத் திகழ்ந்தீர்கள். எனக்கு மனநிறைவுடன் உண்ணக்கொடுத்து தாங்கள் பசித்திருந்தீர்கள். எனக்கு நல்ல ஆடைகள் அணிவித்து தாங்கள் எளிய உடையினை அணிந்து கொண்டீர்கள், எனக்கு நல்ல உணவினை வழங்கிவிட்டு அதனை தங்களுக்கு தவிர்த்துக்கொண்டீர்கள். எந்த சந்தேகமும் இன்றி மறுமையில் இறையருளைப்பெறும் பொருட்டே இதனைத் தாங்கள் செய்துள்ளீர்கள்.”

அல்லாஹ்விடமிருந்து எந்த பெண்ணும் பெற்றிராத உயர் மதிப்பினையும் ஹஸ்ரத் ஃபாத்திமா (ரலி) அவர்கள் பெற்றிருந்தார்கள். அன்னாரது இறுதிக்கடமைகளை நிறைவேற்றுகின்ற போது அவர்களது உடலின் மீது ஹஸ்ரத்

தூய நபி (ஸல்) அவர்கள் கற்பூரம் கலந்த தண்ணீரை ஊற்றினார்கள். தனது சொந்த மேலாடையைக்கொடுத்து அன்னாரின் உடலை போர்த்தச் செய்தார்கள். மேலும் கஃபன் துணியையும் கொடுத்து அவர்கள் மீது மூடச்செய்தார்கள். அடக்கஸ்தலம் தயார் ஆனதும், ஹஸ்ரத் தூய நபி (ஸல்) அவர்கள் தன் அருளுக்குரிய கரங்களால் தானே மண்ணை தோண்டி அடக்கம் செய்வதற்காக தயார் செய்தார்கள். அடக்கஸ்தலம் தயார் ஆனதும், இறைவனிடம் எல்லா பாவங்களுக்காகவும் மன்னிப்பு கோரினார்கள்; கருணையினை வேண்டி துஆ செய்தார்கள். பின் ஜனாஸா தொழுகையினை தொழ வைத்து அன்னாரின் தூய உடலை கபரினுள் இறக்கினார்கள்.

ஹஸ்ரத் ஃபாத்திமா (ரலி) அவர்களுக்கு 4 புதல்வர்களும், 3 புதல்விகளும் இருந்தனர். அன்னாரின் புதல்வர்களுடைய பெயர்கள், ஹஸ்ரத் அக்கீல் (ரலி), ஹஸ்ரத் ஜாஃபர் (ரலி), ஹஸ்ரத் அலீ (ரலி), ஹஸ்ரத் தாலிப் (ரலி). பெண்மக்களுள் ஹஸ்ரத் உம்மே ஹானீ (ரலி), அவர்களுக்குப்பின் ஹஸ்ரத் ஜுமானா (ரலி), ஹஸ்ரத் ராப்தா (ரலி). அன்னாரின் பிள்ளைகள் தங்கள் பெற்றோரின் நல்லியல்புகளைக் கொண்டிருந்தனர்.

## திருமணமும் குழந்தைகளும்

மக்காவிலுள்ள புகழ்பெற்ற குறைஷி கவிஞர் ஹுபைரா பின் மக்ஸம் அவர்களுடன் ஹஸ்ரத் உம்மே ஹானீ (ரலி) அவர்களின் திருமணம் நடந்தது. ஆனால் அவர் இஸ்லாத்தை ஏற்கவில்லை. மக்கா வெற்றியின் போது அவர் நஜ்ரானுக்கு தப்பி ஓடி இஸ்லாத்தின்

மீது நம்பிக்கையற்றவராகவே இருந்தார். எல்லாம் வல்ல இறைவன் ஹஸ்ரத் உம்மே ஹானீ (ரலி) அவர்களுக்கு வழங்கிய நான்கு பிள்ளைகள் ஹஸ்ரத் ஹானீ (ரலி), ஹஸ்ரத் அம்ர் (ரலி), ஹஸ்ரத் ஜஅதா (ரலி), ஹஸ்ரத் யூசுஃப் (ரலி) ஆவர். அக்காலத்து வழக்கப்படி அன்னாரின் பெயர் மூத்த மகனின் பெயருடன் இணைந்து 'உம்மே ஹானீ' ஆனது (ஹானீயின் தாயார்) இந்நால்வரும் இஸ்லாத்தில் இணைந்து, தம் நம்பிக்கைக்கு ஏற்ப வாழ்நாள் முழுவதும் தொண்டாற்றினர். மக்கா வெற்றியின் போது ஹஸ்ரத் உம்மே ஹானீ (ரலி) அவர்கள் இஸ்லாத்தில் இணைந்தார்கள். எனினும் சிலரது கருத்துப்படி அவர்கள் இஸ்லாத்தை முன்னதாகவே ஏற்றுக்கொண்டதாகவும் மற்றவர்களுக்கு வெளிப்படுத்தாமல் இருந்ததாகவும் கூறப்படுகிறது.

## திருக்குர்ஆன் மீது அன்பு

மக்காவில் இருக்கின்ற போது திருக்குர்ஆன் ஓதப்படுவதை மிக ஆவலுடன் கேட்பார்கள். ஒரு முறை இவ்வாறு கூறினார்கள். தூய நபி (ஸல்) அவர்கள் இரவில் திருக்குர்ஆன் ஓதுவதை கஅபாவிற்கு அருகிலுள்ள எங்கள் வீட்டு மாடியிலிருந்து கேட்பது எங்கள் வழக்கமாகும். அன்னார் ஹஸ்ரத் தூய நபி (ஸல்) அவர்களிடம் கொண்டிருந்த பற்றை மக்கா வெற்றியின் போது நடந்த ஒரு நிகழ்ச்சியின் மூலம் தெரிந்து கொள்ளலாம். ஹஸ்ரத் தூய நபி (ஸல்) அவர்கள் ஒரு முறை ஹஸ்ரத் உம்மே ஹானீ (ரலி) அவர்கள் வீட்டிற்கு சென்றிருந்த போது தமக்கு தரப்பட்ட பழச்சாறை தான் சிறிது குடித்து விட்டு மீதியை அவர்களுக்கு

வழங்கினார்கள். ஹஸ்ரத் உம்மே ஹானீ (ரலி) அவர்கள் கூறினார்கள் ‘‘நான் நோன்பிருக்கிறேன், ஆனால் தாங்கள் தருவதை மறுக்க எனக்கு விருப்பமில்லை’’ ஹஸ்ரத் தூய நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் ‘இது ரமளானில் விடப்பட்ட நோன்பாக இருப்பின் இன்னுமொரு நாளில் வைத்துக்கொள்ளலாம், நன்மையை வேண்டி வைக்கும் நஃபில் நோன்பாக இருந்தால் அதனை முறிப்பது உமது விருப்பமாகும்.’ இச்சொற்கள் அன்னார் தூய நபி (ஸல்), அவர்கள் மீது கொண்டிருந்த பற்றையும், பாசத்தையும் மட்டும் தெரிவிக்கவில்லை, மாறாக மக்கா வெற்றிக்கு முன்பாகவே அன்னார் நோன்பு வைத்திருந்தார்கள், இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டிருந்தார்கள் என்பதை பறை சாற்றுகின்றது.

## உறுதியுடன் நிலை நிற்றல்

ஹஸ்ரத் உம்மே ஹானீ (ரலி) அவர்கள் அல்லாஹ்வையும் அவனது திருத்தூதர் ஹஸ்ரத் தூய நபி (ஸல்) அவர்களையும் முழுமனதோடு புனித நோக்கத்துடன் ஏற்றுக்கொண்டு அதில் உறுதியாக நிலைத்து நின்றார்கள். இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டதற்காக அன்னாரின் கணவர் பிரிந்து சென்ற போதிலும் உலகிலுள்ள எந்த சக்தியாலும், உறவாலும் அன்னாரின் நம்பிக்கையைத் தகர்க்க முடியவில்லை. தன் நான்கு குழந்தைகளையும் வளர்த்து அவர்களுக்கு கல்வி புகட்டும் மகத்தான பொறுப்பில் அன்னார் விடப்பட்டார்கள், எனினும் அந்த சூழ்நிலையில் எவ்வித தடுமாற்றத்திற்கும் இடம் கொடாமல் மிகுந்த தைரியத்துடனும், துணிவுடனும் அல்லாஹ்விடம் முழுமையாக பற்று கொண்டவாறு

இதனைக் கையாண்டார்கள். புகழ்பெற்ற கவிஞரான அவர்களின் கணவர் தன் கவிதை மூலம் இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டால் ஏற்படும் இன்னல்களைக்கூறி எச்சரித்தார். ஹஸ்ரத் தூய நபி (ஸல்) அவர்களின் மார்க்கத்தை ஏற்றுக்கொண்டால், வாழ்வு கடினமானதாக ஆகி, பட்டினியில் இருக்க வேண்டியது வரும், மேலும் இருப்பிடத்தை இழக்கவும் நேரிடும் என்று கூறி அறிவுறுத்த முயற்சித்தார். ஆனால் இதுவே நேரான வழி என ஹஸ்ரத் உம்மே ஹானீ (ரலி) அவர்கள் உளப்பூர்வமாக நம்பினார்கள்.

## சிறப்பு அந்தஸ்து

மக்கா வெற்றியின் போது எந்த ஒரு பெண் சஹாபிக்கும் கிடைக்காத மிகப்பெரிய கௌரவத்தை ஹஸ்ரத் உம்மே ஹானீ (ரலி) அவர்கள் பெற்றார்கள். ஹஸ்ரத் தூய நபி (ஸல்) அவர்கள் அன்னாரின் வீட்டிற்கு சென்று இறைவனுக்கு நன்றி செலுத்தும் விதமாக எட்டு ரக்அத் நஃபில் தொழுகை தொழுதார்கள். அந்நேரம், நஃபில் தொழுகைக்கான பிந்தைய காலைப்பொழுதாக இருந்தது. ஹஸ்ரத் உம்மே ஹானீ (ரலி) அவர்கள் இது பற்றி ஹஸ்ரத் தூய நபி (ஸல்) அவர்கள் இவ்வளவு சுருக்கமாக தொழுததை நான் பார்த்ததேயில்லை என்று கூறுகிறார்கள். ஆனால் தம் பிரார்த்தனையையும், சஜ்தாவையும் மிகவும் அமைதியாகவும், நேர்த்தியாகவும் நிறைவேற்றினார்கள்.

மேலும் அன்னாரின் வீட்டில் ஹஸ்ரத் தூய நபி (ஸல்) அவர்கள் உணவு உண்டு, அன்னாரின் சமையல் குறித்து பாராட்டியதற்கான கௌரவத்தையும்

பெற்றார்கள். ஹஸ்ரத் தூய நபி (ஸல்) அவர்கள் உண்ட உணவில் தண்ணீரில் ஊற வைத்த சில காய்ந்த ரொட்டித்துண்டுகளில் குழம்பிற்கு பதிலாக சிறிது வினிகர் தெளிக்கப்பட்டிருந்தது. ஹஸ்ரத் தூய நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். "ஓ! உம்மே ஹானீ! வினிகர் தான் சிறந்த குழம்பு ஆகும். எந்த வீட்டில் வினிகர் உள்ளதோ அது ஒரு போதும் ஏழையின் வீடாகாது."

ஹஸ்ரத் தூய நபி (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் உம்மே ஹானீ (ரலி) அவர்கள் வீட்டில் மாலையில் ஓய்வு பெற தங்கியிருந்த போது 'இஸ்ரா' எனப்படும் ஆன்மீக இரவுப் பயணம் நிகழ்ந்ததால் அதற்கான தனிப்பட்ட மதிப்பையும் அன்னார் பெற்றார்கள். இது பற்றி ஹஸ்ரத் உம்மே ஹானீ (ரலி) அவர்கள் கூறுகிறார்கள் – அன்று இஷா தொழுகை தொழுத பின் ஹஸ்ரத் தூய நபி (ஸல்) அவர்கள் எங்கள் வீட்டில் தூங்கினார்கள். சுப்ஹ் தொழுகைக்குப்பின்,

يا اُمّ هانى رضى الله عنها جئت اِلىٰ بيت المقدس فصيلت فِيهِ ثُمَّصليت الغداة مَعَكُمْ

"ஓ! உம்மே ஹானீ! நான் பைத்துல் முகத்தஸுக்குச் சென்றேன்; அங்கு தொழுதேன்; அதன்பின் எனது காலைத்தொழுகையை உங்களுடன் தொழுதேன்" எனக் கூறினார்கள். (நூல்—திர்மிதி)

இதற்கு ஹஸ்ரத் உம்மே ஹானீ (ரலி) அவர்கள், "இதனைப்பற்றி மக்களிடம் கூறவேண்டாம்; அதனால் அவர்கள் தங்களை நவூதுபில்லா மின் தாலிக் பொய்யர் எனக்கூறலாம்" என்று பதில் உரைத்தார்கள். இதற்கு ஹஸ்ரத் தூய நபி (ஸல்) அவர்கள் "இறைவன் மீது

ஆணையாக, நிச்சயமாக நான் மக்களிடம் கூறுவேன் என பதில் உரைத்தார்கள்; பின்னர் ஹஸ்ரத் தூய நபி (ஸல்) அவர்கள் ஏனையவர்களிடமும் ஆன்மீக இரவுப்பயணம் பற்றி விவரித்தபோது அவர்கள் வியப்படைந்தனர்.

ஹஸ்ரத் தூய நபி (ஸல்) அவர்கள் மேற்கொண்ட இரவுப்பயணம் பௌதீக உடலோடு செய்த பயணம் அல்ல. மாறாக அது ஒரு ஆன்மீகப் பயணம் ஆகும். எந்த ஒரு மனிதனும் கண்டிராத காட்சிகளை எல்லாம் வல்லமைமிக்க அல்லாஹ் அவர்களுக்கு மட்டுமே காண்பித்துக்கொடுத்தான். இந்த அற்புதத்தை திருக்குர் ஆனின் கீழ்கண்ட வசனம் எடுத்துரைக்கின்றது.

سُبْحٰنَ الَّذِیْٓ اَسْرٰی بِعَبْدِهٖ لَیْلًا مِّنَ الْمَسْجِدِ الْحَرَامِ اِلَی الْمَسْجِدِ الْاَقْصَا

தன் அடியாரை சிறப்பிற்குரிய இந்த மஸ்ஜிதிலிருந்து, தொலைவிலுள்ள அந்த மஸ்ஜித் வரை இரவு நேரத்தில் கொண்டு சென்ற இறைவன் தூய்மையானவன். (17:2)

இந்த ஆன்மீக காட்சியில் வானவர்களின் தலைவர் ஜிப்ரீல் (அலை) விண்ணின் படைப்பு ஒன்றை கொண்டு வந்து ஹஸ்ரத் தூய நபி (ஸல்) அவர்களுக்கு வழங்கி அதில் அமரச் சொன்னார்கள். அந்த படைப்பினம் மிக அழகிய, வெள்ளை நிறமுடைய குதிரையைப்போன்று இருந்தது. மேலும் அல்புராக் என அழைக்கப்பட்டது. அதில் ஏறி அமர்ந்ததும் அது பறந்து ஹஸ்ரத் தூய நபி (ஸல்) அவர்களை புனித நகரமான ஜெருசலேமுக்கு கொண்டு சென்றது. இப்புனித மகத்துவம் மிக்க இடத்தில் ஹஸ்ரத் தூய நபி (ஸல்) அவர்கள் நடத்திய கூட்டுத்தொழுகையில் அன்னாருக்கு முன்னர் அனுப்பப்பட்ட அனைத்து இறைதூதர்களும் அவர்களின்

பின்னால் நின்று தொழுதனர்.

ஹஸ்ரத் உம்மே ஹானீ (ரலி) அவர்கள் கைபர் போரிலும் ஹஸ்ரத் தூய நபி (ஸல்) அவர்களுடன் கலந்து கொண்டார்கள். போரில் கிடைத்த பொருட்களுள் 40 ஒட்டகங்கள் சுமக்கக்கூடிய அளவு உணவு தானியங்களை அன்னாருக்கு ஹஸ்ரத் தூய நபி (ஸல்) அவர்கள் வழங்கினார்கள்.

## ஹஸ்ரத் தூய நபி[ஸல்] அவர்கள் கொண்டிருந்த கண்ணியமும், மரியாதையும்

அறியாமை காலத்திலிருந்தே கைதிகளுக்கும் சமுதாயத்தில் நலிவடைந்தவர்களுக்கும் தஞ்சம் அளிக்கும் உரிமை பெண்களிடம் இருந்து வந்தது. இதனை கருத்தில் கொண்டு நமது அன்பிற்குரிய எஜமானர் ஹஸ்ரத் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்கள் முஸ்லிம் பெண்களின் அந்தஸ்தை, மதிப்பை பாதுகாத்து ஒன்று அல்லது இரண்டு ஆண்களுக்கு தஞ்சம் அளிக்க அனுமதி வழங்கி இருந்தார்கள். ஹஸ்ரத் உம்மே ஹானீ (ரலி) அவர்கள் தம் மாமனார், மாமியாரிடம் அன்பும், மதிப்பும் வைத்திருந்தார்கள். அன்னாரின் கணவரின் குடும்பத்தில் மரண தண்டனை வழங்கப்பட்ட இரு உறவினருக்கு அன்னார் அடைக்கலம் கொடுத்தார்கள். ஹஸ்ரத் தூய நபி (ஸல்) அவர்களும் அன்னாரது செயல்முறையை ஏற்றுகொண்டார்கள். ஹஸ்ரத் உம்மே ஹானீ (ரலி) அவர்கள் இச்சம்பவத்தை இவ்வாறு விளக்குகிறார்கள்.

ஹஸ்ரத் தூய நபி (ஸல்) அவர்கள் மக்காவின் மேல் புறத்தில் நடமாடும் படைத்தளத்தை நிறுவிய போது

பனூமக்ஜூம் குலத்தைச் சார்ந்த இருவர் என்னை நோக்கி ஓடி வந்தார்கள். என் சகோதரர் அலீ பின் தாலிப் (ரலி) அவர்களுக்கு பின்னாலிருந்து வந்து, இறைவன் மீது ஆணையிட்டு அந்த இருவரையும் கொல்லப்போவதாக அறிவித்தார்கள். நான் வீட்டின் முன்கதவை மூடி விட்டு அவ்விருவருக்கும் அடைக்கலம் கொடுத்திருப்பதாகக் கூறினேன்; பின் ஹஸ்ரத் தூய நபி (ஸல்) அவர்களிடம் சென்றேன். "ஓ! உம்மே ஹானீ! வாருங்கள். உங்கள் வருகையின் நோக்கமென்ன" என்று கேட்டார்கள். நான் அவர்களிடம் அந்த இருவர் பற்றியும் அலீ (ரலி) அவர்கள் என் வீட்டிற்கு வந்தது பற்றியும் கூறினேன். ஹஸ்ரத் தூய நபி (ஸல்) அவர்கள் 'உங்கள் அடைக்கலத்தின் கீழ் யார் இருந்தாலும் அவர் என்னாலும் பாதுகாக்கப்படுவார். அலீ (ரலி) அவர்கள் அவர்களைக் கொல்ல மாட்டார்கள்' என்று உறுதி அளித்தார்கள்.

இந்நிகழ்வின் காரணமாக சஹாபா பெருமக்கள் ஹஸ்ரத் உம்மே ஹானீ (ரலி) அவர்களின் மதிப்பையும், மரியாதையையும் கண்டுகொண்டார்கள். ஏனெனில் ஹஸ்ரத் தூய நபி (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் உம்மே ஹானீ (ரலி) அவர்களிடம் கண்ணியத்தோடு நடந்து, அன்னாரை உயர்வான அந்தஸ்தில் வைத்திருந்தார்கள். அவர்கள் மீது அளப்பரிய பாசம் கொண்டிருந்தார்கள். அன்னாரின் நிலைமை நன்கு தெரிந்திருந்ததால் அவர்களுக்கு ஆறுதல் கூறுவார்கள். அன்னாரின் வீட்டிற்கு அடிக்கடி சென்று தம் நேசத்தையும், அன்பையும் தெரிவிப்பார்கள். ஒருமுறை கூறினார்கள். உம்மே ஹானீ! ஆடு ஒன்றை எடுத்துக்கொள்ளுங்கள். இது ஒரு நன்மை தரும் பிராணியாகும்.

ஹஸ்ரத் தூய நபி (ஸல்) அவர்களின் இளைய மகள் ஹஸ்ரத் ஃபாத்திமா (ரலி) அவர்கள் தம் சகோதரர் ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களுக்கு துணைவியாக ஆனபோது இன்னும் அதிகமான நற்பேற்றினை ஹஸ்ரத் உம்மே ஹானீ (ரலி) அவர்கள் பெற்றிருந்தார்கள். இதனால் ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களுக்கு ஹஸ்ரத் தூய நபி (ஸல்) அவர்களின் மருமகன் என்ற உயர் அந்தஸ்து கிடைத்தது. இதனால் ஹஸ்ரத் உம்மே ஹானீ (ரலி) அவர்களுக்கு ஹஸ்ரத் தூய நபி (ஸல்) அவர்களுடனான குடும்ப உறவு இன்னும் நெருக்கமானது. ஹஸ்ரத் தூய நபி (ஸல்) அவர்களுக்கு தேவையான வசதிகளை செய்து கொடுப்பதில் அதிக ஆர்வம் கொண்டிருந்தார்கள். சில அறிவிப்புகளின்படி அன்னாரின் பிள்ளைகள் சிறுவர்களாக இருந்த போது அடிக்கடி அன்னார், ஹஸ்ரத் தூய நபி (ஸல்) அவர்களை சந்திக்க செல்லவில்லை. ஒரு நாள் ஹஸ்ரத் அப்பாஸ் (ரலி) அவர்கள் அன்னாரிடம் ஹஸ்ரத் தூய நபி (ஸல்) அவர்கள் விசாரித்ததாகக் கூறினார்கள். அதற்கு அன்னார் ''என் குழந்தைகள் சிறுவர்களாக உள்ளனர். இதன் காரணமாக ஹஸ்ரத் தூய நபி (ஸல்) அவர்களுக்கு ஏதும் கஷ்டமோ, தொல்லையோ கொடுக்க நான் விரும்பவில்லை'' எனக்கூறினார்கள்.

## நல்லொழுக்கங்கள்

ஹஸ்ரத் உம்மே ஹானீ (ரலி) அவர்கள் மிக எளிமையான நற்பண்புகள் கொண்ட பெண்மணியாக இருந்தார்கள். தம் தாயாரிடமிருந்து தன்னடக்கம், விருந்தோம்புதலின் பண்பை தம் குடும்ப பாரம்பரியத்தின் அடிப்படையில் பரிசாகப் பெற்றிருந்தார்கள். அல்லாஹ்வின்

மீது கொண்ட அன்பில் தம்மை பிணைக்கப்பட்டவர்களாய் இருந்தார்கள். நேர்த்தியான இறை சிந்தனையுடன், அல்லாஹ்வின் மீது முழு நம்பிக்கையும் அவர்களுக்கு இருந்தது. அவர்களின் வாழ்வில் ஏற்பட்ட கணக்கில் அடங்காத இன்னல்களுக்கு ஒரு வார்த்தைகூட குற்றச்சாட்டு கூறாமல் மிகுந்த பொறுமையுடனும், மன தைரியத்துடனும் அதனை எதிர் கொண்டார்கள். தன் தந்தையாரிடமிருந்து அறிவுத்திறன் மற்றும் இலக்கியத்தில் புலமை ஆகியவற்றை மரபுவழியில் பெற்றிருந்தார்கள். திருக்குர்ஆனின் ஆழிய ஞானத்தின் சிந்தனையில் மூழ்கியவர்களாக அன்னார் இருந்தார்கள். மேலும் ஃபிக்கா என்னும் மார்க்க சட்டத்தில் அதிக நாட்டம் இருந்ததால், ஏராளமான பிரச்சினைகளுக்கு தீர்வு கண்டார்கள். அதே போன்று திருக்குர்ஆனின் சில வசனங்களுக்கான ஆழிய ஞானங்களை நேரடியாக ஹஸ்ரத் தூய நபி (ஸல்) அவர்களிடமே கேட்டு தெரிந்து கொண்டார்கள்.

## ஞானமும் அறிவும்

மக்காவில், குரைஷி பெண்களிடையே, இன்னும் குறிப்பாக ஹாஷ்மி பெண்களிடையே ஹஸ்ரத் உம்மே ஹானீ (ரலி) அவர்கள் ஒரு அறிவார்ந்த, மதிநுட்பம் மிக்க, நல்ல ஆலோசனை வழங்கக்கூடிய பெண் என்று மதிக்கப்பட்டார்கள். அன்னார் அறிவின் உயர் நிலையை பெற்றவர்களாகத் திகழ்ந்தார்கள், மேலும் அன்னார் அறிவித்த ஹதீஸ்கள் 46 ஆகும். ஆறு நம்பகத்தன்மைகொண்ட ஹதீஸ்களுள் ஒன்றான ஸிஹா ஸித்தாவில் அவை இடம் பெற்றுள்ளன. அவர்களது மகன்

ஹஸ்ரத் ஜஅதா (ரலி), மற்றும் பேரன் ஹாரூன் (ரலி) ஆகியோரும் சில ஹதீஸ்களை ஹஸ்ரத் உம்மே ஹானீ (ரலி) அவர்கள் கூறியதாக எடுத்துக்கூறியுள்ளனர். அவர்களால் கூறப்பட்ட ஹதீஸ்களுள் ஒன்று அனைத்து முஸ்லிம் பெண்களுக்கும், சிறுமிகளுக்கும் ஒரு தூதுச்செய்தியாகவும், அறிவுரையாகவும் உள்ளது. குறிப்பாக ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களிடம் கூறியதாக இவ்வாறு வருகிறது;

عَنْ أُمّ هانى رضى الله عنها قَالَتْ: قَالَ رسُولُ الله ﷺ: يا عَائِشَةُ ليكن شَعَارُكِ الْعِلْمُ و القُرْاٰنَ

பொருள்:– ஹஸ்ரத் உம்மே ஹானீ (ரலி) அவர்கள் ஹஸ்ரத் தூய நபி (ஸல்) அவர்கள் கூறியதாக அறிவிக்கிறார்கள் ‘‘ஆயிஷாவே, திருக்குர்ஆனும் அதன் ஞானங்களும் உம் ஆடையாக இருத்தல் வேண்டும். – இதன் பொருள் திருக்குர் ஆனுடன் அதிக நேசம் வைத்திருத்தல் வேண்டும், வேறு ஏதும் உமக்கு மதிப்பு மிக்கதாக நெருக்கமானதாக இருக்க வேண்டாம்’’ (ஷஆர் என்பது உடலுடன் ஒட்டி அணியப்படும் ஆடை) (நூல்–முஸ்னது அல்இமாமுல் அஃஸம் கிதாபுல் இல்ம் பக்கம் 20)

ஹஸ்ரத் உம்மே ஹானீ (ரலி) அவர்கள் மிகப்பணிவுடன் நடக்கும் தூய பெண்மணியாகத் திகழ்ந்தார்கள், அவர்களுக்கு அதிக வயதான போது உடல் நலிவடையத்தொடங்கியதால் தன்னால் இறைவனுக்கு செலுத்தும் வணக்கங்களை சரிவர செய்ய இயலவில்லையே என வருந்தினார்கள். இக்கவலையை ஹஸ்ரத் தூய நபி (ஸல்) அவர்களிடம் ‘‘எனக்கு வயதாகி விட்டது, நடப்பதற்கு பலகீனமாக உணர்கிறேன், நான் உட்கார்ந்து

இருக்கின்ற நிலையில் கூறுவதற்கு சில துஆக்களைச் சொல்லித் தாருங்கள்'' என்றார்கள். ஹஸ்ரத் தூய நபி (ஸல்) அவர்கள் 'சுப்ஹானல்லாஹ்' 100 முறையும், 'அல்ஹம்துலில்லாஹ்' 100 முறையும், 'அல்லாஹு அக்பர்' 100 முறையும், 'லா இலாஹ இல்லல்லாஹ்' 100 முறையும் சொல்வீராக எனக்கூறினார்கள். இவ்வாறாக அன்னார் அல்லாஹ்வை நினைவு கூறுவதில் தம்மை அதிகமாக ஈடுபடுத்திக்கொண்டார்கள்.

## ஹஸ்ரத் உம்மே ஹானீ[ரலி] அவர்களது மரணம்

வல்லமை மிக்க அல்லாஹ்வின் பேரருளால் ஹஸ்ரத் உம்மே ஹானீ (ரலி) அவர்கள் நீண்ட நாட்கள் உயிர் வாழ்ந்து 4 குலஃபாயே ராஷிதீன் (நேர்வழி பெற்ற கலீஃபாக்களுடைய) காலத்தின் அருட்களையும் காணும் பேற்றினைப் பெற்றிருந்தார்கள். நான்கு நேர்வழி பெற்ற கலீஃபாக்களும், சஹாபா பெருமக்களும், மற்ற அறிஞர் பெருமக்களும் அன்னாரை உயர் அந்தஸ்தில் வைத்திருந்தனர். இவர்கள் யாவரும் ஹஸ்ரத் உம்மே ஹானீ (ரலி) அவர்களை கண்ணியப்படுத்தினர், ஏனென்றால் அன்னார் ஹஸ்ரத் தூய நபி (ஸல்) அவர்களால் கண்ணியப்படுத்தப்பட்டார்கள். தம் கடைசி மூச்சு வரை அந்த கௌரவத்தை அன்னார் பெற்றிருந்தார்கள்.

كُلُّ مَنْ عَلَيْهَا فَان அழிந்து போகக்கூடிய இவ்வுலகிற்கு வருகை தரும் ஒவ்வொருவரும் அவர் நபியாக இருந்தாலும், நம்பிக்கையாளராக, அருளுக்குரியவராக, அன்புக்குரியவராக இருந்தாலும் இதனை விட்டு புறப்பட்டே ஆக வேண்டும். மரணம் ஒரு இயற்கை

நிகழ்வாகும். ஹஸ்ரத் உம்மே ஹானீ (ரலி) அவர்கள் தம் சகோதரர் ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களின் மரணத்திற்கு பிறகும் வாழ்ந்திருந்தார்கள். ஹிஜ்ரி 50 – இல் அமீர் முஆவியா (ரலி) அவர்களின் காலத்தில் அன்னார் தன்னைப் படைத்தவனிடம் சென்றார்கள். மேலான இறைவன் அவர்கள் மீது திருப்தி அடைவானாக, நம்பிக்கையாளர்களுடன் அன்னாருக்கு இடமளிப்பானாக. ஹஸ்ரத் உம்மே ஹானீ (ரலி) அவர்களைப் போன்ற அல்லாஹ்வின் அருளைப் பெற்றவர்களின் வழியில் நடக்கும் நற்பாக்கியத்தினை நமக்கும் இறைவன் தந்தருள்வானாக. ஆமீன்.